# மரம் விழுந்து வாகனம் சேதம்

கோலாலம்பூர், நவ. 19-

நேற்று முன்தினம் டேசா பாண்டான் பகுதியில் மரம் விழுந்ததில் வாகனம் சேதமுற்றது. ஆயினும் இச்சம்பவத்தில் உயிருடற்சேதம் ஏற்படவில்லை என்று கோலாலம்பூர் மாநகர மன்றத் தரப்பு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்தக் கமர்ஷியல் பகுதியில் மரம் விழுந்ததை அடுத்து அங்கு சாலை தற்காலிகமாக மூடப்பட்டது. மரத்தை வெட்டி அப்புறப்படுத்தும் பணிகளை மாநகர மன்றப் பணியாளர்களும் மலேசியப் பொது தற்காப்புப் படையினரும் மேற்கொண்டனர்.



அவர்கள் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் வாகனப் போக்குவரத்தையும் கட்டுப்படுத்தினர் என்று அந்த அறிக்கையில் தகவல் உள்ளது.